V6T

விருதுநகர் மாவட்டம்
தொகுத்தறி தேர்வு - செப்டம்பர் 2024

-----

வகுப்பு 6

காலம்: 2.00 மணி | தமிழ் | மதிப்பெண்கள்: 60

பகுதி - I

**அ) சரியான விடையைத் தேர்வு செய்க:** 10×1=10

1) தாய்மொழியில் படித்தால் ................ அடையலாம்.
அ) பன்மை ஆ) மேன்மை இ) பொறுமை ஈ) சிறுமை

2) கதிரவனின் மற்றொரு பெயர் ................
அ) புதன் ஆ) ஞாயிறு இ) சந்திரன் ஈ) செவ்வாய்

3) விண்வெளி என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................
அ) விண்+வளி ஆ) விண்+வெளி இ) விண்+ஒளி ஈ) விண்+வொளி

4) ஒருவர்க்குச் சிறந்த அணி ................
அ) மாலை ஆ) காதணி இ) இன்சொல் ஈ) வன்சொல்

**ஆ) கோடிட்ட இடத்தை நிரப்புக:**

5) மிக நீண்ட தொலைவு பறக்கும் பறவை ................

6) உலக சதுரங்க வீரரை வெற்றிகொண்ட மீத்திறன் கணினியின் பெயர் ................

**இ) பொருத்துக:**

7) அறிவுக்கு - தென்றல்
8) புலவர்க்கு - நிலாஒளி
9) முத்துச்சுடர் போல - தோள்
10) சித்தம் மகிழ்ந்திட - வேல்

பகுதி - II

**ஈ) ஓரிரு சொற்களில் விடையளிக்க: (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)** 5×2=10

11) பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் யாவை?
12) மனிதர்களுக்கு மருந்தாக விளங்குவது எது?
13) தமிழ் ஏன் மூத்தமொழி என்று அழைக்கப்படுகிறது?
14) வலசையின் போது பறவையின் உடலில் ஏற்படும் மாற்றங்கள் யாவை?
15) எழுத்துகளுக்குத் தொடக்கமாக அமைவது எது?
16) தமிழ் எழுத்துகளுக்குரிய மாத்திரை அளவுகளைக் குறிப்பிடுக.
17) மொழிக்கு முதலில் வரும் உயிர்மெய் எழுத்துகள் யாவை?

**உ) ஓரிரு தொடர்களில் விடை தருக: (ஏதேனும் மூன்று வினாக்கள் மட்டும்)** 3×4=12

18) கால வெள்ளத்தை எதிர்த்து நிற்கும் மொழி தமிழ் என்று கவிஞர் கூறுவதன் காரணம் என்ன?
19) இதுவரை எத்தனை கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன? அவை யாவை?
20) சிட்டுக்குருவியின் வாழ்க்கை பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
21) துருவப்பகுதிகளில் ஆய்வு செய்ய எந்திர மனிதர்களை அனுப்புவதன் காரணம் யாது?
22) சார்பெழுத்துகள் எத்தனை? அவை யாவை?

Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி - III

**ஊ) மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக:** **4+2=6**

23) 'மாமழை போற்றுதும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

24) 'ஈன்ற பொழுதின்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - IV

**எ) பின்வரும் வினாக்களுக்கு விடையளி: (ஏதேனும் ஐந்து வினாக்கள் மட்டும்)** **5×2=10**

25) **கீழ்க்காணும் சொற்களில் உள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக:**

அ) கவிதை

ஆ) பரிபாடல்

26) **பொருத்தமான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

அ) பரந்து விரிந்து இருப்பதால் கடலுக்குப் ............. என்று பெயர். (பறவை / பரவை)

ஆ) இலக்கிய மன்ற விழாவில் முகிலன் சிறப்பாக ............. ஆற்றினார். (உரை / உறை)

27) **தொடர்களைப் பிரித்து இரண்டு தொடர்களாக எழுதுக:**

அ) கபிலன் வேலை செய்ததால் களைப்பாக இருக்கிறான்.

ஆ) இலக்கியா இனிமையாகப் பாடியதால் பரிசு பெற்றாள்.

28) **கலைந்துள்ள எழுத்துகளை முறைப்படுத்துக:**

அ) விகண்லம்

ஆ) மத்ருதும்வ

29) **வாக்கியத்தை நீட்டி எழுதுக:**

நான் சென்றேன். (ஊருக்கு, நேற்று, பேருந்தில்)

30) **தமிழ் எண்களாக மாற்றுக:**

அ) 76 ஆ) 30

31) **கலைச்சொல் தருக:**

அ) E-mail

ஆ) Artificial Intelligence

## பகுதி - V

**ஏ) ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக:** **1×6=6**

32) அத்தையின் கடிதக் கருத்துகளைச் சுருக்கி எழுதுக.

33) 'கிழவனும் கடலும்' என்னும் படக்கதையை உங்கள் சொந்த நடையில் கதையாக எழுதுக.

**ஐ) ஏதேனும் ஒன்றனுக்கு விடை தருக:** **1×6=6**

34) விடுப்பு விண்ணப்பம் - கடிதம் எழுதுக.

35) 'அறிவியல் ஆக்கங்கள்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

----------

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com